# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுன் மாத அவரசக்கூட்டம் 05.06.2020 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அலுவலக 03.06.2020 ஆம் தேதிய மின்னஞ்சல் செய்தியில், தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் : 2020-21 -ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைப்பதற்காக ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் தேர்வு செய்து, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.3-ல் விவேகானந்தா சாலை முதல் குளச்சல் கடை சாலை வரை, வார்டு எண்.19-ல் நெசவாளர் தெற்கு தெரு, வார்டு எண்.22-ல் இக்பால் தெரு, வார்டு எண்.23-ல் புல்லன்விளை சாலை ஆகியவற்றில் பேவர் இயந்திரத்தை பயன்படுத்தி தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.12,13,14-ல் துறைமுகத்தெரு, வார்டு எண்.21-ல் காவடிவிளை சாலை ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 100.00 |

எனவே, மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.100.00 இலட்சம் தொகையினை தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் : 2020-21-ன் கீழ், முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையருக்கு திட்ட அறிக்கை சமர்பபிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.571/2020/இ1

**தீர்மானம் எண்.2280 அங்கீகரிக்கப்பட்டது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுன் மாத அவரசக்கூட்டம் 23.06.2020 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோடு Check post அருகில் துறைமுகப்பாலம் முதல் மரமடி வரை (சாம்பசிவபுரம் க.எண்.9-42)90mm PVC குழாய் அமைத்தல் பணிக்கு, தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,60,000/- க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2257 நாள் 30.04.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 2.01% அதிகம்<br>(ரூ.1,40,039/-) |
| 2. | திரு.சி.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 1.11% குறைவு<br>(ரூ.1,35,755.20/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர்,ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 1.11% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.463/2020/இ1

**தீர்மானம் எண்.2281 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்சார வாரிய குளச்சல்-1 பிரிவு அலுவலகத்தில் மின் பயனீட்டாளர் வசதிக்காக நிழல் பந்தல் (Shed) அமைப்பதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.42,000/- க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2251 நாள் 30.04.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.35% அதிகம்<br>(ரூ.36,762/-) |

| | | |
|---|---|---|
| 2. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.17% குறைவு<br>(ரூ.36,571.80/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.436/2020/இ1

**தீர்மானம் எண்.2282 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை சமீபம் மற்றும் தினசரி சந்தையில் அமைந்துள்ள கழிப்பிடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,60,000/- க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2252 நாள் 30.04.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.23% அதிகம்<br>(ரூ.2,28,678/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br>(ரூ.2,28,060.40/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.443-1/2020/இ1

**தீர்மானம் எண்.2283 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சி நகர்மன்றத் தலைவர், பொறியாளர் அறை ஆகியவற்றில் கழிவறை சுவர், கதவு ஆகியவை பழுதுநீக்கம் மற்றும் ஈப்பு நிறுத்துமிட Shed, பேருந்து நிலைய காங்கிரீட் தளம் ஆகியவை சரி செய்தல் பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/- க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2244 நாள் 30.04.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.10% குறைவு<br>(ரூ.2,65,222.50/-) |

| | | |
|---|---|---|
| 2. | திரு.சி.சுரேஷ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.19% அதிகம்<br>(ரூ.2,65,980.50/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.436/2020/இ1

**தீர்மானம் எண்.2284 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில், நோயாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்களின் வசதிக்காக கட்டிடத்தின் அரகில் நிழல் பந்தல் (Shed) அமைத்தல், புதிதாக கழிவறை கட்டுதல் மற்றும் தற்போதைய கட்டிடத்தின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.25% அதிகம்<br>(ரூ.2,78,765/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.06% குறைவு<br>(ரூ.2,77,901.26/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.434/2020/இ1

**தீர்மானம் எண்.2285 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-ல் க.எண்.15/68-ன் அருகில் புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2250 நாள் 30.04.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.11% அதிகம்<br>(ரூ.84,598/-) |

| | | |
|---|---|---|
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>(ரூ.84,480.50/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.433/2020/இ1

**தீர்மானம் எண்.2286 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.7

இந்நகராட்சி உப்பளம் பகுதி உரக்கிடங்கில், குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்கும் பணிகளுக்காக தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2256 நாள் 30.04.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s. R.J. Power,<br>Nattalam, Kuzhithurai | மதிப்பீட்டை விட 0.61% அதிகம்<br>(ரூ.50,869/-) |
| 2. | திரு.சி.சுரேஷ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br>(ரூ.50,540.40/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சுரேஷ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.430-2/2020/இ1

**தீர்மானம் எண்.2287 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு 2020-2021 ஆம் நிதி ஆண்டிற்கு தேவையான சமையல் பொருட்கள், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கு உத்தேச செலவினம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **செலவினங்கள்** | **தொகை (ரூ.)** |
|---|---|---|
| 1 | அம்மா உணவக பணியாளர்களின் ஊதியம் | 8,25,000/- |
| 2 | மளிகை பொருட்கள் | 15,00,000/- |
| 3 | காய்கறிகள் | 5,00,000/- |
| 4 | ஆவின் பால் | 1,50,000/- |
| 5 | சிலிண்டர் எரிவாயு | 4,00,000/- |
| 6 | டோக்கன் | 1,25,000/- |
| 7 | அரிசி | 25,000/- |

| | | |
|---|---|---|
| 8 | வண்டி வாடகை மற்றும் அரிசி ஏற்றுக்கூலி | 15,000/- |
| 9 | இதர செலவினம் | 10,000/- |
| | மொத்தம் | 35,50,000/- |

மேற்படி உத்தேச செலவினம் ரூ.35,50,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2288 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பயன்பாட்டில் உள்ள பாத்திரங்கள் பழுதடைந்து சமையல் செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையை முன்னிட்டு மூன்று வேளை சாப்பாடு மற்றும் டிபன் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள் அவசர அவசியம் கருதி வாங்க வேண்டியுள்ளதால் உத்தேச செலவினம் ரூ.50,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2289 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.10

குளச்சல் நகராட்சி ஒரு முதல் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியில் 1592 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் ஒரு மின்கம்பியாளர் மற்றும் ஒரு மின் கம்பி உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டு உள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழகு (ந.ப3) துறை அரசாணை நிலை எண்.70 நாள் 05.05.1998-ன் படி, 600 தெருவிளக்கு பராமரிப்பிற்கு ஒரு மின் கம்பியாளர் மற்றும் ஒரு உதவியாளர் என அளவு கோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1592 தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு ஒரு மின்கம்பியாளர் மற்றும் ஒரு உதவியாளர் மட்டும் உள்ளதால், நகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்கு பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதில் தொய்வு ஏற்பட்டு, பொது மக்கள் மத்தியில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. எனவே நிர்வாக நலன் கருதி, தெருவிளக்கு பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு ஏதுவாக, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலியின்படி, 2 எண்ணம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பணிக்கு அமர்த்துவதற்காக மதிப்பீடு ரூ.4,25,000/-க்கும், தயார் செய்யப்பட்டு, அவசர அவசியம் கருதி மன்ற முன்அனுமதி பெற்று, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.675/2020/இ1

**தீர்மானம் எண்.2290 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முகக்கவசம், சமூக இடைவெளி, பொது இடங்களில் எச்சில் துப்புவது போன்ற செயல்களுக்கு அபராதம் விதிக்க ஏதுவாக அபராத கட்டணம் ரெசீது 8 புக் அச்சடித்த வகையில் ரூ.3050/- தாசன் அச்சகத்திற்கும், கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அபராதம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (முகக்கவசம், சமூக இடைவெளி, எச்சில் துப்புவது) பேனர் அச்சடித்த வகையில் ரூ.600/- சுகாதார ஆய்வாளர் (திரு.ஸ்ரீஜேஷ் குமார்) என்பவருக்கும் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2291 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.23 மற்றும் 24-ன் இடையில் உள்ள சுவரை வியாபார வசதிக்காக இடித்து அப்புறப்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு மேற்படி கடைகளின் குத்தகைதாரர் திரு.F.பைஜு ராகுல் என்பவரால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில், மேற்படி கடைகளின் இடை சுவற்றை இடித்து அகற்றுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ரூ.15,000/- ம் சம்மந்தப்பட்ட குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டும் என பொதுப்பணி மேற்பார்வையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மதிப்பீட்டுத் தொகை ரூ.15,000/-க்கும், இடைச்சுவர் இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1790/2016/இ1

**தீர்மானம் எண்.2292 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.13

இந்நகராட்சி நுண்ணுயிர் உரக்கிடங்கில் நகரில் சேகரிக்கும் திடக்கழிவுகளை கொட்டி உரமாக்கும் பணி பைரவி பவுண்டேசன் நிறுவனம் மூலம் நடைபெற்று வந்தது. தற்போது நுண்ணுயிர் உரக்கிடங்கில் பணிபுரியும் பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், வெளியாட்கள் குப்பைகளை கொண்டு சென்று கொட்டாமலும் கண்காணிக்கவும் பைரவி பவுண்டேசன் நிறுவன கோரிக்கையின்படி, மேற்படி நிறுவனத்தின் சொந்த செலவில் திடக்கழிவு பூங்காவிலும், அதற்கு சம்மந்தப்பட்ட இடங்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.212/2018/எச்1

**தீர்மானம் எண்.2293 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் நெசவாளர் தெரு, சுந்தர் அச்சகம் அருகில் செல்லும் குறுக்கு தெருவில், வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு, சாலையின் மேற்பரப்பில் கழிவு நீர் தேங்கியுள்ளது. மேற்படி வடிகால் ஒடை அமைக்கப்பட்டு, 20 ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட நிலையில், வடிகால் ஏடையின் Vent Portion சிறியதாகவும், உயரம் குறைவாகவும் உள்ளதால், புதிதாக வடிகால் ஓடை அமைக்கப்பட வேண்டும். எனவே பொது சுகாதார நலன் கருதி, மேற்படி பகுதியில் புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.619/2020/இ1

**தீர்மானம் எண்.2294 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.15

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN-75-K-6526-ல் பழுதுகள் ஏற்பட்டு, வாகனம் இயக்குவதில் சிரமம் ஏற்பட்டு வருவதால், அலுவலக பணிகளில் மேற்படி வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, கீழ்காணும் பழுதுகளை சரி செய்வதற்கு, பெறப்பட்ட விலைப்புள்ளியின் படி, உத்தேச மதிப்பீடு ரூ.11,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

1. Changing of Engine oil.
2. Changing of oil & Diesel filters.
3. Wheel alignment, Balancing check up.
4. Silencer and Maflor repairing works.
5. Changing of New air filter.
6. Full water wash and Greese works.

எனவே மேற்காணும் பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற M/s.Mathava motors, Vellamadam நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.2295 அங்கீகரிக்கப்பட்டது.**

ந.க.எண்.7057-1/2011/இ1

## பொருள் எண்.16

கொரோனாவால் தொற்று உலகில் சீனாவை தொடர்ந்து 136 நாடுகளில் பரவி உள்ள நிலையில் நமது இந்தியதிருநாட்டிலும், இந்நோயின் தாக்கம் ஏற்பட்ட நிலையில், கொரோனா வைரஸின் தாக்கம் அதிகமாகி கொண்டிருந்ததின் அடிப்படையில் அதனை கட்டுப்படுத்தும் பொருட்டு மாண்புமிகு பாரதபிரதமர் அவர்களால் 24.03.02020 முதல் 13.04.2020 வரை 21 நாட்கள் ஊரடங்கு கடைபிடிக்க உத்தரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. துப்புரவு ஆய்வாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், தூய்மை இந்தியா திட்டம் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள், மருத்துவ அலுவலர்,

நகர் சுகாதார செவிலியர், DBC பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களுடன் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தேவையான பொது சுகாதார தளவாட சாமான்களான சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், கிருமி நாசினிகள், முகவுரை, கையுறை, முழு கவச உறைகள் கொள்முதல் செய்யப்பட்டு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கொரோனா வைரஸ் தொற்று பரவி வந்த நிலையில் அதனை கட்டுப்படுத்த ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு, தற்போது 30.06.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் நோய் தொற்று வேகமாக அதிகரித்து வரும் நிலையில், நகராட்சி பகுதிகளில் நோய் தொற்று பரவாமல் தடுப்பதற்கு இருக்க தேவையான கிருமி நாசினிகள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கூடுதலாக தேவைப்படுவதால், அதனை வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.15,00,000/- மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாநில பேரிடர் நிவாரணம் நிதியின் கீழ், கூடுதல் நிவாரணத் தொகை விடுவிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2296 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.17

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு கிருமிநாசினிகள் (ம) பயன்பாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | Reusable Mask 1st Quality | Reusable Mask 2nd Quality | Lysol with Disinfectant | Cotton with rubber gloves | Sodium hypochloride |
|---|---|---|---|---|---|---|
| 1. | Parisith Traders Thiruchirapalli | 15+5% GST | 10+5% GST | 150+18% GST | 120+18% GST | 13+18% GST |
| 2. | Kamala Traders, Thiruchirapalli | 18+5% GST | 14+5% GST | 190+18% GST | 150+18% GST | 17+18% GST |
| 3. | RSA Traders, Thiruchirapalli | 20+5% GST | 15+5% GST | 195+18% GST | 160+18% GST | 19+18% GST |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் வரிசை எண்.2 (ம) 3 ஐ விட வரிசை எண்.1 Parisith Traders, Thiruchirapalli நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு, COVID-19 அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.2,50,000/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2297 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.18

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தையில் அமைந்துள்ள ஆவின்பாலகம், வரிவிதிப்பு எண்.148/2007063-க்கு 28.02.2020 உடன் குத்தகை உரிமம் முடிவடைந்து விட்டதால் 01.03.2020 முதல் 28.02.2023 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்யவும், வாடகை தொகையில் 15% வரி உயர்வு செய்யவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை | வரிவிதிப்பு எண். | வாடகைதாரர் பெயர் | தற்போதைய மாதவாடகை | 15% வரிஉயர்வு செய்த வாடகை | வரிஉயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆவின்பால் | 148/2007063 | கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தயாளர் சங்கம் | 365/- | 55/- | 420/- |

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2298 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.19

இந்நகராட்சியில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த பணிகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டதில், பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை மற்றும் EMD தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் பெயரில் உள்ள வைப்புத் தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **இருப்பில் உள்ள வைப்புத் தொகை** |
|---|---|---|
| 1. | K.G.KRISHNA DHAS | ரூ.7,74,372/- |
| 2. | K.G.KRISHNA DHAS | ரூ.1,55,500/- |

ந.க.எண்.783/2019/பி1

**தீர்மானம் எண்.2299 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.20

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடை எண்.29,30-ன் இடையில் உள்ள சுவற்றை LIC அலுவலக பயன்பாட்டிற்காக இடித்து அகற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு சம்மந்தப்பட்ட கடையின் குத்தகைதாரர் திரு.A.நற்சீசன் என்பவரால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் நேராய்வு மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீட்டு கட்டணம் ரூ.15,000/-ம் செலுத்தப்பட வேண்டும் என பொதுப்பணி மேற்பார்வையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கடைகளின் இடைசுவர் அகற்றுவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.15,000/-ஐ குத்தகைதாரர் செலுத்துவதற்கும், மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1790/2016/இ1

**தீர்மானம் எண்.2300 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.21

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை முழுமையாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், குறுகலான தெருக்களில் உள்ள வீடுகளிலிருந்து பெறப்படும் கழிவுகளை அந்த இடத்திலேயே தரம் பிரித்து சேகரிப்பதற்கு போதிய தள்ளு வண்டிகள் இல்லாத காரணத்தால், துப்புரவு பணியாளர்களின் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார நலன் கருதி, புதிதாக 30 எண்ணம் தள்ளு வண்டிகள் (Push Carts with 4 Nos.Plastic Bins) வாங்குவதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7,20,000/-க்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.470/2020/இ1

**தீர்மானம் எண்.2301 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.22

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோடு மற்றும் பழைய சிங்காரவேலன் காலனி ஆகிய பகுதிகளில், குடிநீர் குழாயில் கழிவுநீர் கலந்து வந்ததால், மேற்படி பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, குடிநீர் குழாயை தோண்டி சரி செய்ய முற்பட்ட போது, குடிநீர் குழாய் ஏ.வி.எம் கால்வாயின் அருகில் செல்வதால், உடைவு ஏற்பட்ட இடத்தை கண்டறிய இயலவில்லை. மேலும் நகராட்சி குடிநீர் வினியோக லாரியின் தொட்டி பகுதி (Tank) மிகவும் மோசமாக பழுதடைந்து, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளதால், பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, வாடகை லாரி மூலம் குடிநீர் வழங்கும் பொருட்டு, M/s.சகாய மாதா லாரி சர்வீஸ் மூலம் 6 முறை குடிநீர் வழங்கிய வகையில் (1 முறைக்கு ரூ.750/- வீதம் ) ரூ.4500/-ஐ சம்மந்தப்பட்ட லாரி சர்வீஸ் உரிமையாளர் திரு.S.ஞானசேகர் என்பவருக்கு நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1531/2019/இ2

**தீர்மானம் எண்.2302 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.23

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண்.17-ல் பூக்குழி தெருவில் திரு.M.சித்திக் என்பவர் பெயரில் 2011-2012 I முதல் 2020-2021 II வரை 1744 சதுர அடிக்கு வரிவிதிப்பு எண்.148/017/00565-ன் படி காலிமனை வரி விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு மீண்டும் காலிமனை வரி விதிப்பு எண். 148/017/00477-ன்படி, வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே ஒரே இடத்திற்கு தவறுதலாக இரண்டு தடவை வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதால் காலிமனை வரிவிதிப்பு எண்.148/017/00477-ன் கேட்புத் தொகை ரூ.5760/-ஐ 2011-2012 I முதல் 2020-2021 II வரை ரத்து செய்ய மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.4826/2012/அ1

**தீர்மானம் எண்.2303 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.24

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள தரைதளம் கடை எண்.27-க்கு முன்வைப்புத் தொகையாக ரூ.50,000/- செலுத்தி திரு.மு.அர்ச்சுனன் என்பவர் 16.08.2019-ல் பொது ஏலத்தில் கடையை வாடகைக்கு எடுத்துள்ளார். ஆனால் மேற்படி கடைக்கு மின் இணைப்பு இல்லாத காரணத்தினாலும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் அலுவலகத்தில் முன்வைப்புத் தொகை ரூ.50,000/-ஐ திருப்பி கேட்டுள்ளார். எனவே அன்னாருக்கு முன்வைப்புத் தொகையை திருப்பி வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2304 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.25

பொது சுகாதாரப்பிரிவில் 2020-21 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ.எண்** | **செலவினம் - விபரம்** | **உத்தேச செலவினங்கள்** |
|---|---|---|
| 1. | துப்புரவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு பண்டிகை காலங்களில் ஆண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும் சீருடைகள் மற்றும் தையற்கூலி. | ரூ.1.00 இலட்சம் |
| 2. | துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகள் மற்றும் ஒளியூட்டும் ஜாக்கெட்டுகள் (Reflected jacket) | ரூ.0.50 இலட்சம் |
| 3. | துப்புரவு பணியாளர்களுக்கு தேவைப்படும் தளவாட சாமான்கள் | ரூ.2.00 இலட்சம் |
| 4. | துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவ முகாமிற்கு தேவைப்படும் மருந்துகள் | ரூ.1.00 இலட்சம் |
| 5. | பொது சுகாதார லாரிகள் தகுதி சான்று கட்டணம் பெற (FC) வாகனத்தில் உள்ள பழுதுகள் சரி செய்தல். | ரூ.5.00 இலட்சம் |
| 6. | பொது சுகாதார லாரி மற்றும் BOV வாகனங்களுக்கு டயர்டியூப், பேட்டரி உள்ளிட்ட உதிரி பாகங்கள் சரி செய்வதற்கு | ரூ.3.00 இலட்சம் |
| 7. | பொது சுகாதார லாரி மற்றும் BOV வாகனங்களில் பணி நேரத்தில் ஏற்படும் திடீர் பழுதுகளை சரி செய்வதற்கு | ரூ.5.00 இலட்சம் |
| 8. | பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் உள்ளிட்டவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ளுதல். | ரூ.5.00 இலட்சம் |
| 9. | கொசு ஒழிப்புக்கு தேவைப்படும் பைரித்திரம், பேக் டிசைடு மற்றும் அபேட் மருந்து வாங்குதல். | ரூ.5.00 இலட்சம் |
| 10. | லார்வா - கொசு ஒழிப்பு பணி - Sprayer புதிதாக 5 வாங்குதல். | ரூ.0.20 இலட்சம் |
| 11. | டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் தொற்று நோய்கள் குறித்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல், பிளக்ஸ் போர்டு அடித்தல், பிட் நோட்டீஸ் அச்சடித்து வழங்குதல பேரணி போன்ற பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.2.00 இலட்சம் |
| 12. | Fogging Machine புதிதாக வாங்குதல் | ரூ.2.00 இலட்சம் |
| 13. | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் குறித்தும், சுகாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வு | ரூ.1.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| | கூட்டங்கள், ஆட்டோ விளம்பரம் பிளக்ஸ், சுவர் விளம்பரம், பிட் நோட்டீஸ் அச்சடித்து வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல். | |
| 14. | பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல். | ரூ.0.50 இலட்சம் |
| 15. | கலவை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை அவ்வப்போது JCB மற்றும் டிராக்டர் மூலம் அள்ளி சமன் செய்தல். | ரூ.2.00 இலட்சம் |
| 16. | நகராட்சி பொது கழிப்பிடங்களை செப்டிக் டேங்க் லாரி மூலம் சுத்தம் செய்தல். | ரூ.1.00 இலட்சம் |
| 17. | கழிவு நீர் மற்றும் மழைநீர் செல்லும் பாலத்தின் அடைப்புகளை சரி செய்திட Air Compressor லாரி மூலம் சுத்தம் செய்தல். | ரூ.0.50 இலட்சம் |
| 18. | மழை நீர் செல்லும் வாய்க்கால்கள், பாலங்களில் உள்ள மண் அடைப்புகளை சரி செய்திட JCB மற்றும் டிராக்டர் மூலம் அப்புறப்படுத்துதல். | ரூ.1.00 இலட்சம் |
| 19. | கலவை உரக்கிடங்கில் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்க தேவைப்படும் EM Solution மற்றும் தேவையான மூலப்பொருட்கள் (உமி, தவடு, வெல்லம்) மற்றும் லெமன்கிராஸ் ஆயில் வாங்குதல். | ரூ.2.00 இலட்சம் |

மேற்கண்ட இனங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.527/2020/எச்1

**தீர்மானம் எண்.2305 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.26

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள் தரைதளம் 2,17,18,25,26,39 மற்றும் முதல்தளம் 36,37 கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் முதல் தளம் கடை எண்கள்.38,39,40,47 முதல் 52 மற்றும் 56 முதல் 59 வரை, கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் தரைதளம் கடை எண்கள்.25,32 மற்றும் நவீன மீன் சந்தை தரைதளம் கடை எண்கள் 3,4,7 மற்றும் முதல் தளம் 1,7 ஆகியவற்றிற்கு 16.06.2020-ல் பொது ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் கலந்து கொண்ட ஏலத்தாரர் பெயர் மற்றும் ஏல விபரம் பின்வருமாறு,

| வ. எண் | ஏலத்தாரர் பெயர் | கடை எண். | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | திரு.அசீர் | 2 | 11500/- | 11500/- |

மேற்காணும் கடைக்கு ஒரே ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை.

கலம் (5)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் ஏலம் போகாத கடைகளை மறுஏலம் விடவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2306 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.27

கொரோனா வைரஸ் (COVID-19) நோய்த்தடுப்பு பணிக்காக கிருமி நாசினிகள், மருந்து தெளிப்பான்கள் (ம) பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கீழ்குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி பொருட்கள் வாங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்கள் விபரம் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | M/s.Raju Bearings, Nagercoil | Power Sprayer | 69180/- |
| 2 | Lotus international Services, Chennai | Thermal Scanner | 39530/- |
| 3 | Dream Infra, Thoothukudi | பாதுகாப்பு உபகரணங்கள் | 57875/-+ 2500/- |
| 4 | மாவட்ட நுகர்பொருள் கூட்டுறவு பண்டகசாலை, இராமநாதபுரம் | கிருமி நாசினிகள் (ம) பாதுகாப்பு உபகரணங்கள் | 261600/- |
| 5 | திரு.மகேந்திரன், குளச்சல் | கொரோனா விழிப்புணர்வு ஓவியம் வரைந்தது. | 14000/- |
| 6 | மாவட்ட நுகர்பொருள் கூட்டுறவு பண்டகசாலை, இராமநாதபுரம் | கபசுர குடிநீர் மருந்து | 37760/- |
| 7 | பாண்டியன் ஏஜென்சீஸ், மதுரை | பாதுகாப்பு உபகரணங்கள் | 626190/- |
| 8 | TamilNadu Multipurpose Indco serve, Trichy | Reflective Jacket | 54600/- |
| | | கிருமி நாசினிகள் | 637200/- |
| 9 | மாவட்ட நுகர்பொருள் கூட்டுறவு பண்டகசாலை, இராமநாதபுரம் | கபசுர குடிநீர் மருந்து | 117000/- |
| 10 | TamilNadu Multipurpose Indco serve, Trichy | Lemon Grossoil | 295000/- |
| 11 | Thiru.C.Devaraj, Contractor | Wash Basin with Pipe fittings | 8500/- |
| | | சமூக இடைவெளி வட்டம் (ம) இதர பணிகள் | 30000/- |
| 12 | C.தேவராஜ், ஒப்பந்ததாரர் | பேருந்து நிலைய வியாபாரக் கூடம் வாடகை (43 நாட்கள்) | 42140/- |
| 13 | வினாயக் கெமிக்கல்ஸ் | பாதுகாப்பு உபகரணங்கள் | 61180/- |
| 14 | C.தேவராஜ், ஒப்பந்ததாரர் | பேருந்து நிலைய வியாபாரக்கூடம் வாடகை (11 நாட்கள்) | 10780/- |
| 15 | TamilNadu Multipurpose Indco serve, Trichy | கிருமி நாசினிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் விழிப்புணர்வு நோட்டீஸ் | 456989/- |

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2307 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.28

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல், மாநகராட்சி / நகராட்சி பகுதிகளில் முகக்கவசம் அணியாமல் வெளியில் வரும் நபர்களுக்கு அபராதம் விதிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 03.06.2020 ஆம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையர் நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.1133/2020/எச்1 நாள் 05.06.2020-ன் படி, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முகக்கவசம் அணியாமல் வெளியில் வரும் பொது மக்களுக்கும், வியாபார பெருமக்களுக்கும் மற்றும் சமூக இடைவெளி கடைபிடிக்காத நிறுவனங்கள், வியாபார ஸ்தல உரிமையாளர்களுக்கும் அபராதம் கீழ்க்கண்டுள்ள விபரப்படி அபராதம் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| முதல் முறையாக முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் | ரூ.100/- |
| இரண்டாவது முறையாக முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் | ரூ.500/- |
| மூன்றாவது முறையாக முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் | ரூ.1000/- |

மூன்று முறைக்கு மேல் அபராதம் கட்டியவர்கள் தொடர்ந்து விதியை மீறி செயல்பட்டால் வியாபார ஸ்தலம் கடைகள் உரிய முறைப்படி பூட்டி சீல் வைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2308 அங்கீகரிக்கப்பட்டது.**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுன் மாத அவரசக்கூட்டம் 30.06.2020 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்காரவேலர் காலனி பகுதியில், ஏ.வி.எம் கால்வாயின் குறுக்கே பொது மக்கள் பயன்பாட்டிற்காக கட்டப்பட்ட சிறுபாலம் மிகவும் மோசமாக பழுதடைந்து உள்ளதால், மாற்று வழி எதுவும் இல்லாத நிலையில் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருவதை கருத்தில் கொண்டு, மேற்படி சிறுபாலத்திற்கு மாற்றாக புதிய சிறுபாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதுமான நிதி இல்லாத காரணத்தால், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தற்போது கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் மேற்படி பணியினை செயல்படுத்த தற்போது வழிவகை இல்லை. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி சிறுபாலத்தில் தற்காலிகமாக பழுதுகளை சரி செய்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,80,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.693-1/2020/இ1

**தீர்மானம் எண்.2309 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் துறைமுகத்தெருவில் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையில் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,000/- க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2270 நாள் 29.05.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 26.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.35% அதிகம்<br>(ரூ.85,667.50/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.17% குறைவு<br>(ரூ.85,222.75/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.196/2020/இ1

**தீர்மானம் எண்.2310 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை பகுதியில் அமைந்துள்ள 2 எண்ணம் குடிநீரேற்று நிலையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,50,000/- க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2279 நாள் 29.05.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 26.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.41% அதிகம்<br>(ரூ.1,30,763/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர்<br>. | மதிப்பீட்டை விட 0.15% குறைவு<br>(ரூ.1,30,033.25/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.15% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1009/2019/இ2

**தீர்மானம் எண்.2311 அனுமதி வழங்கப்படுகிறது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்தப்பட்டது. ஏப்ரல் 2020 முதல் ஜுன் 2020 வரை 89 நாட்களுக்கு தினக்கூலி பட்டியலின்படி, கால நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது ஜுலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். A1/8583/2019 நாள் 10.07.2019-ல் தெரிவித்துள்ள தினக்கூலி பட்டியலின்படி, காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3,80,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2312 அனுமதி வழங்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன்சந்தை கடை எண்கள்.5,6,8, வரிவிதிப்பு எண்கள்.148/2017003, 148/2017004, 148/2017006-க்கு குத்தகை உரிமம் 30.06.2020 உடன் முடிவடைகிறது. மேற்படி கடை எண். 5,6-க்கு குத்தகை தொகையில் 15% வரி உயர்வு செய்து உரிமம் புதுப்பிக்கவும், கடை எண்.8-ன் குத்தகை உரிமத்தை ரத்து செய்ய திருமதி.D.ஜெமிலா என்பவர் மனு செய்துள்ளார். எனவே கீழ்க்காணும் விபரப்படி கடை எண்.5,6-க்கு குத்தகை தொகை உயர்வு செய்யவும், கடை

எண்.8 வரிவிதிப்பு எண்.148/2017006-ன் உரிமத்தை ரத்து செய்யவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண். | கடை எண். | வரிவிதிப்பாளர் பெயர் | தற்போதைய மாத வாடகை | 15% வரி உயர்வு செய்த வாடகை | வரி உயர்வு செய்த பின்னர் மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 148/2017003 | 5 | D.ஜெசி ஜெனட் | 5700/- | 855/- | 6555/- |
| 2. | 148/2017004 | 6 | R.மோகன்லால் பாபு | 5500/- | 825/- | 6325/- |

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.2313 அனுமதி வழங்கப்படுகிறது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பயன்பாட்டில் உள்ள பாத்திரங்கள் பழுதடைந்து, சமையல் செய்ய இயலாத நிலை உள்ளதால் அவற்றிற்கு மாற்றாக தேவையான பாத்திரங்களை அவசர அவசியம் கருதி வாங்குவதற்கு நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை (ரூ.) |
|---|---|---|
| 1. | பேபி மெட்டல்ஸ், திங்கள் நகர் | 35153/- |
| 2. | பேபி அம்மா ஏஜென்சி, நெய்யூர் | 39939/- |
| 3. | பிஸ்மி மார்கெட்டிங், சுவாமியார் மடம் | 45510/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளியில் பேபி மெட்டல்ஸ், திங்கள் நகர் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வினியோக உத்தரவு வழங்கவும், மேற்படி இனத்திற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2314 அனுமதி வழங்கப்படுகிறது.**

## பொருள் எண்.7

குளச்சல் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2019-க்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் தயார் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.வ4/28285/2019 நாள் -09.2019 -ன் படி, தீன் கிராபிக்ஸ், மதுரை அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி, வாக்காளர் பட்டியல் அச்சடித்த வகையில் தீன் கிராபிக்ஸ் மதுரை என்பவருக்கு ரூ.47,711/- வழங்க அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.221/2019/அ2

**தீர்மானம் எண்.2315 அனுமதி வழங்கப்படுகிறது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் பண்டகசாலைபுரம் பகுதியில் வடிகால் ஓடையின் மேல் அமைக்கப்பட்டுள்ள சிறுபாலத்தில் அடைப்பு ஏற்பட்டு, கழிவு நீர் சீராக செல்ல முடியாமல் தேங்கி நிற்பதுடன், அருகில் அமைந்துள்ள வீட்டினுள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி சிறுபாலத்தின் கழிவு நீர் செல்லும் Vent Portion மிகவும் குறுகலாக உள்ளதால் இந்நிலை ஏற்பட்டு வருகிறது. எனவே பொது சுகாதார கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி சிறுபாலத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு, அதற்கு மாற்றாக புதிதாக சிறு பாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,00,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.735-1/2020/இ1

**தீர்மானம் எண்.2316 அனுமதி வழங்கப்படுகிறது.**